1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்ச்சேஸ் டாக்ஸ் என்று சொன்னார்கள். விவசாயிகள் வாங்குவது இல்லை. வாங்குவது மற்றவர்கள் தான். விவசாயிகள் மீது அது போகாது.

முற்பகல் 9-45

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பர்ச்சேஸ் டாக்ஸ் என்று போட்டால் வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து வெல்லத்தை வாங்குகிற போது, அதைக் குறைத்து தான் வாங்குகிறார்கள். ஆகவே அது மறைமுகமாக விவசாயிகளுடைய தலையில்தான் விழுகிறது என்ற காரணத்தினால், 6 பெர்சன்டிலிருந்து குறைந்த பட்சம் 3 பெர்சென்ட் அல்லது 4 பெர்சென்ட் ஆக குறைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் குறைப்பதனால் இருக்கிற குறைபாடு நீங்காது. வாங்குகிறவர்கள் தான் கண்டிப்பாக வரி கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பாக நடைமுறைப்படுத்தலாமே ஒழிய அதைக் குறைக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 478, திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

478—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

*3752—திரு. செ. ஆறுமுகம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதியில் வானூர் கிராமம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வியாண்டிலேயே தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. ஆறுமுகம் : பெரிய பேறுபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் கல்வி வளர்ச்சி அடைவதற்காக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இருக்கிற பேரே போதும் தனியாக இனி வேறு வேண்டியதில்லை.

திரு செ. ஆறுமுகம்: தமிழக மக்கள் உண்மையான கல்வி வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக புரட்சிகரமான புதிய திட்டங்களை இன்றைய தினம் அறிவித்திருக்கிற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் வானூர் தனித் தொகுதியில், வானூர் கிராம நடுநிலைப் பள்ளியினை உயர் நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்னால் அரசுக்கு முன் தொகையாக ரூ. 22,500 கட்டப்பட்டுள்ளது. வளர்ச்சியற்ற எங்கள் தனித் தொகுதியை கவனத்தில் கொண்டு வானூர் கிராம நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இப்படி பணம் கட்டி கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அரசு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளை தந்து வருகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு இப்போது நடந்துக் கொண்டிருக்கிற ஆண்டிற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுவிட்டன. இனி 1993–94 ஆம் ஆண்டிற்கான கருத்துருக்கள் பெறப்பட வேண்டும். அப்போது வானூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் பெறப்பட்டால், உயர்நிலைப் பள்ளிகள் துவங்குவ தற்கு அமைக்கப்பட்ட உயர் மட்ட குழுவின் பரிசீலனைக்குப் பின், அக்குழு பரிந்துரை செய்தபின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரமாகிய வானூரைச் சுற்றி 20 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்நிலை கல்வி பெறவும் பல ஆண்டுகளுக்கு முன்னால் அரசு விதிமுறைப்படி முன்பணம் செலுத்தப்பட்டுவிட்ட காரணத் தாலும் இந்த நிதி ஆண்டிலேயே வானூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல இப்படி பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்துத்தான் முடிவு செய்ய வேண்டிய நிலையும், தேவைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டிய நிலையும் இருக்கிற காரணத்தால் அதற்கு கருத்து அனுப்பப்பட வேண்டும்.

இந்த ஆண்டுக்கு அனுப்பப்பட வேண்டும். அந்தக் கருத்துருவை அதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு பரிசீலிக்கும். அந்தக்குழு பரிசீலித்து பரிந்துரை செய்தால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 479 திருமதி வி. ஜி. மணிமேகலை மாண்புமிகு கல்வி அமைச்சர்.

479—

அறிவொளி இயக்கச் செயலாக்கம்.

* 4526—திருமதி வி. ஜி. மணிமேகலை ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அறிவொளி இயக்கம் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாகச் செயலாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அறிவொளி இயக்கம் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாக 1991-92, 1992-93 மற்றும் 1993-94 ஆகிய நிதியாண்டுகளில் மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

திருமதி வி. ஜி. மணிமேகலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடும் இளைஞர்களுக்கு அரசு எந்தவகையில் உதவி செய்கிறது, அவர்களுக்கு ஜாப் செக்கியூரிட்டி தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு அவர்களை அறிவொளி இயக்கத்திலே பயன்படுத்திக் கொள்ளும்.

திருமதி வி. ஜி. மணிமேகலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரவேண்டும் என்பதிலே குறிப்பாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்திலே அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவொளி இயக்கத்திற்கு தற்காலிகமாக பயன்படுத்திக் கொள்ளும் என்று கூறியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அவர்களுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒரு துணைக் கேள்வி போதும். ஏற்கெனவே ஒரு துணைக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.